**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE DHARMAPURI**

O.S. No. 32 of 2016

Deposition of P.W.1

Name of the Witness: திரு.ராஜன்

Date :12.11.2024

**குறுக்கு விசாரணை**

நான் மஞ்சநாய்க்கன்தண்டா அரசு தொடக்கப்பள்ளியில் 11 வருடங்களாக ஆசிரியராக பணிபுரிந்து வருகிறேன். நான் பொம்மிடியில் குடியிருக்கிறேன். நான் தற்போது சொந்த வீட்டில் குடியிருக்கிறேன். அந்த வீடு எனது மனைவி காயத்திரி பேரில் உள்ளது. வீட்டின் கதவு எண் நியாபகம் இல்லை. அந்த வீட்டில் குடியிருந்து வருவதற்கு ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை. என்னுடைய பிரமாண வாக்குமூலத்தை போன வாரம் தாக்கல் செய்துள்ளேன். அதிலுள்ள விவரங்கள் எனக்கு தெரியும். எனது தந்தையின் சொத்தை பாகம் பிரித்து கொடுக்கவேண்டும் என்று பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேன். அந்த பிரமாண வாக்குமூலத்தில் ஆசிரியராக பணிபுரிந்து வருவதாக சொல்லவில்லை என்றால் சரிதான்.

2) நான் என்னுடைய தாவாவில் தாக்கல் செய்துள்ள பரம்பரை விளக்கப்படம் பற்றிய விவரங்கள் எனக்கு தெரியும். என் அப்பா தேவராசுக்கு ஜெயலட்சுமி, நாகமணி என்று இரண்டு மனைவிகள் என்றால் சரிதான். இருவரும் தற்போது உயிருடன் இருக்கிறார்கள் என்றால் சரிதான். ஜெயலட்சுமி தான் தேவராசின் முதல் மனைவி என்றால் சரிதான். இந்த வழக்கில் ஜெயலட்சுமியை பிரதிவாதியாக சேர்க்கவில்லை என்றால் சரிதான். என் அப்பா ஜெயலட்சுமியை விவாகரத்து செய்ததற்கு ஆவணம் எதுவும்

தாக்கல் செய்யவில்லை. தாக்கல் செய்ய தயாராக உள்ளேன். ஜெயலட்சுமி என் அப்பாவை 1976ல் விவாகரத்து செய்து விட்டார். நீதிமன்றம் மூலமாக விவாகரத்து ஏற்படவில்லை. ஜெயலட்சுமி பதிவு செய்யப்பட்ட விடுதலை பத்திரம் எழுதி கொடுத்துள்ளார். விடுதலை பத்திரம் நீதிமன்ற உத்திரவு விவாகரத்து இல்லை என்றால் சரிதான்.

3) என் அப்பா 14.11.2015ல் இறந்து விட்டார். என் அப்பா எங்கள் வீட்டில் தான் இறந்தார். என் அப்பா கேன்சரினால் இறந்தார். வா.சா.ஆ.5 எனது அப்பா தேவராசின் இறப்பு சான்றிதழின் படி எங்கள் வீட்டில் இறக்கவில்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.5ல் உள்ள விலாசத்தில் நான் குடியிருப்பதாக என்னுடைய பிரமாண வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் சரிதான். அப்போது நான் இறப்பு சான்றிதழ் முகவரியில் தான் குடியிருந்தேன். நான் பொய்யாக அந்த முகவரியில் இருந்ததாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. சொத்தை அபகரிக்க வேண்டும் என்ற எண்ணத்தில் தான் எனது சரியான வீட்டு விலாசத்தை வேண்டும் என்றே தாவாவில் சொல்லவில்லை என்றால் சரியல்ல. என் அப்பாவின் வாரிசு சான்றிதழை நான் தாக்கல் செய்யவில்லை. நான் என் அப்பாவின் வாரிசு சான்றிதழ் கேட்டு மனு போட்டேன். பிரதிவாதிக்கு கொடுத்து விட்டு எனக்கு கொடுக்கவில்லை. என்னிடம் காட்டப்படும் வாரிசு சான்றிதழ் தான் என் அப்பாவுடையது என்றால் சரிதான். அது பிரதிவாதிகளுக்கு கொடுக்கப்பட்டது. அந்த வாரிசு சான்றிதழ் **பி.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. அதில் என் அம்மா பெயர் இல்லை. ஜெயலட்சுமியின் பெயர் உள்ளது.

4) என்னிடம் காட்டப்படும் ரிட் பெட்டிசன் நம்பர் 23580/2017 மனுவில் எனது அம்மா என் அப்பாவின் வாரிசு சான்றிதழில் தன்னை சேர்க்கவேண்டும் என்று ஜெயலட்சுமி பெயரை நீக்க வேண்டும் என்ற மனு 23.09.2022ல் தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் சரிதான். பின்னர் சாட்சி தனக்கு தெரியாது என்றும் வழக்கறிஞர் தன்னிடம் சொல்லவில்லை என்றும் சொல்கிறார். சென்னை உயர்நீதிமன்ற உத்திரவு படி எனது அம்மா 1ம் வாதி என் அப்பாவின் சட்டப்படியான வாரிசு இல்லை என்றால் சரியல்ல. 1ம் வாதி என் அப்பாவின் சட்டப்படியான வாரிசு இல்லை என்பதால் அவர்களது பிள்ளைகளான எங்களுக்கும் தாவா சொத்தில் பாகம் கோர எந்தவிதமான உரிமையும் இல்லை என்றால் சரியல்ல. தேவராசின் மனைவி ஜெயலட்சுமியை இந்த வழக்கில் தரப்பினராக சேர்க்காததால் இந்த வழக்கு தள்ளுபடியாக வேண்டும் என்றால் சரியல்ல.

5) என் அம்மா 1ம் வாதியை 1977ல் என் அப்பா தேவராஜ் பவானி கூடுதுறை சங்கமேஸ்வர் கோவில் திருமணம் செய்து கொண்டார். தேதி, மாதம் தெரியவில்லை. திருமண விவரம் எனது அம்மா சொல்லி தான் எனக்கு தெரியும். இந்த திருமணம் சம்பந்தமாக ஆவணம் எதுவும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. என் அப்பாவிற்கும், எனது அம்மாவிற்கும் திருமணமே நடக்கவில்லை என்பதால் தான் நான் ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றாலும், என் அப்பாவிற்கும், எனது அம்மாவிற்கும் திருமணமே நடக்கவில்லை என்றால் சரியல்ல. 4ம் பிரதிவாதி இறந்து போன மாலதியின் கணவர். மாலதி எனது அப்பாவிற்கும், அவரது முதல் மனைவிக்கும் பிறந்தவர். மாலதி இறந்து விட்டார். எப்போது இறந்தார் என்று எனக்கு தெரியாது. 5

முதல் 7 பிரதிவாதிகள் மாலதியின் மக்கள் என்றால் சரிதான். 5ம் பிரதிவாதிக்கு தற்போது 18 வயது ஆகிவிட்டது என்றால் எனக்கு தெரியாது. அவருக்கு 18 வயது ஆகிவிட்டதால் அவரது தந்தையை பாதுகாவலரை நீக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றால் சரிதான். 4ம் பிரதிவாதிக்கும் வழக்கில் பாகம் உள்ளதாக தான் சொல்லியுள்ளேன். 4ம் பிரதிவாதிக்கு வாரிசு அடிப்படையில் பாகம் இல்லை என்றாலும் 5 முதல் 7 பிரதிவாதிகளுக்கு தான் பாகமுள்ளது என்றால் சரியல்ல. 4ம் பிரதிவாதி இந்த வழக்கிற்கு தேவையற்ற தரப்பினர் என்பதால் இந்த வழக்கு தள்ளுபடியாக வேண்டும் என்றால் சரியல்ல.